# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.89/2021

## அ.சா.2

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **கருப்பையா** | **தொழில்** | |
| **தகப்பனார் பெயர்** | **குருசாமி** | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலூகா** | | **தேதி** | **26.10.2022** |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது அரசு பணியிலிருந்த ஓய்வு பெற்றுள்ளேன். கடந்த 26.09.2016ம் தேதி கோட்டூர் கிராம உதவியாளராக பணிபுரிந்து வந்தேன். நானும் மற்றோர் கிராம உதவியாளரான சுப்பிரமணியும் பணி செய்து கொண்டியிருந்த போது சங்கால்பட்டி ஓடைக்கு அருகே ஒரு ஆண் பிரேதம் கிடந்ததை பார்த்தோம். கிராம அலுவலருக்கு தகவல் கொடுத்தோம். சடலத்தில் தலை, கால், கண்புருவம் ஆகிய பகுதியில் காயம் ஏற்பட்டு இருந்தது. இறந்தவர் கருப்பு பேண்ட் போட்டு இருந்தார், கலர் சட்டை அணிந்திருந்தார். ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவ சமயத்தில் சங்கால்பட்டியில் தான் குடியிருந்தேன். நான் குடியிருந்த வீட்டிற்கும் கிராம நிர்வாக அலுவலகத்திற்கும் சுமார் 1 1/2 மையில் தூரம் இருக்கும். அசா.1 சம்பவ சமயம் கோட்டூர் கிராமத்தில் குடியிருந்தார். 26.09.2016ம் தேதி காலை 6 மணிக்கு என்ன வேலையாக சங்கால்பட்டி பிரிவிக்கு சென்றேன் என்றால் வழக்கமான ரோந்து பணிக்கு தான் சென்றேன். மைக்கால்பாளையம் – சங்கால்பட்டி பிரிவு ஓடைக்கும் சங்கல்பட்டி பிரிக்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்று கேட்டால் 1 1/2 மையில் தூரம் இருக்கும். சங்கால்பட்டி பிரிவு ஓடைக்கு அருகில் கடைகள், வீடுகள், தோட்டத்து வீடுகள் எதுவும் இல்லை. சடலத்தை பார்த்தவுடன் சடலத்தில் இருந்த காயங்களை பார்த்து தெரிந்து கொண்டேன். சடலத்திற்கு சட்டை, பேண்ட் போடப்பட்ட நிலையில் இருந்தது. கிராமநிர்வாக அலுவலருக்கு போன் மூலமாக தகவல் தெரிவித்தேன். அப்பொழுது கிராம நிர்வாக அதிகாரி அலுவலகத்தில் இருப்பதாக தெரிவித்தார்.

போன் மூலம் தகவல் கொடுத்த அரை மணி நேரத்தில் கிராம நிர்வாக அதிகாரி சடலம் இருந்த இடத்திற்கு வந்துவிட்டார். சடலம் இருந்த இடத்தை கிராம நிர்வாக அதிகாரி சுமார் 1 மணி நேரம் ஆய்வு செய்தார். சடலம் இருந்த இடத்திற்கும் நிலக்கோட்டை காவல்நிலையத்திற்கும் இடையே சுமார் 3 கி.மீ தூரம் இருக்கும். சடலம் இருந்த இடத்திலிருந்து நான், கிராம நிர்வாக அதிகாரி ஆகியோர் சுமார் 1 1/2 மணி நேரத்தில் கிளம்பிவிட்டோம். இந்த வழக்கு சம்மந்தமாக ஆய்வாளர் என்னை 9 மணியளவில் விசாரணை செய்தார். நான் குறிப்பிட்டது போல் சங்கால்பட்டி பிரிவு அருகே ஆண் பிரேதத்தை பார்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சடலம் பார்த்த விபரத்தை கிராம நிர்வாக அதிகாரியிடத்தில் தகவல் தெரிவிக்கவில்லை என்று சொன்னால்ச சரியல்ல. காவல்துறை கேட்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>மறு விசாரணை இல்லை.</u>

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

P SARAVANAN

Digitally signed by P SARAVANAN
Date: 2022.10.26 17:49:10 +0530

Additional District Judge,

Dindigul.